**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.**

L.A.O.P. No. 101/2024

**<u>Deposition of the witness:</u>** R.W. 1

Solemnly affirmed by Thiru/Tmt Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சுப்பிரமணியம் |
| Father's Name | : | சிவதாணுமாலையன் செட்டியார் |
| Village | : | வடிவீஸ்வரம் |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | விவசாயம் |
| Age | : | 56 |
| Date | : | 06.02.2026 |

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் இந்த மனுவின் 11 வது எதிர்மனுதாரர். என் சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன். 06.02.1925 ஆம் தேதியிட்ட அசல் வழக்கு எண். 45/1094 M.E. ன் மாவட்ட நீதிமன்றத்தின் திட்ட தீர்ப்பாணை (Scheme Decree) நகல் எ.ம.சா.ஆ. 1 ஆகவும், 11.01.2020 ஆம் தேதியில் நாகர்கோவில் முதன்மை சார்பு நீதிமன்ற E.A. No. 3/2019 ல் O.S. No. 45/1094 M.E. ல் சமர்ப்பிக்கப்பட்ட ஆணையர் அறிக்கை மற்றும் உத்தரவு நகல் எ.ம.சா.ஆ. 2 ஆகவும், பட்டா எண். 570 ன் இணைய வழி நகல் எ.ம.சா.ஆ. 3 ஆகவும், 06.08.2025 ஆம் தேதியிட்ட

சர்வே எண். 74/1B ன் தொடர்பான நிலபதிவேட்டின் (SLR) சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ. 4 ஆகவும் மற்றும் நயினார் தேசிக விநாயகர் தேவஸ்தானத்தின் பேங்க் ஆப் மகாராஷ்டிரா, நாகர்கோவில் கிளையின் வங்கி கணக்கு புத்தக நகல் எ.ம.சா.ஆ. 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுபடி தீர்ப்பாக கோருகிறேன்.